# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ்நாடு தொலைத்தொடர்பு ஒப்பந்தத் தொழிலாளர் சங்கம்

### தமிழ் மாநிலம்

**தேதி: 18-08-2014.**

**BSNL-ல் உழைப்பு சுரண்டலை ஒழிப்போம்-26.08.2014 தர்ணா**

**அன்பார்ந்த தோழர்களே, தோழியர்களே ,**

**2014 ஜனவரி 18 மற்றும் 19 தேதிகளில் புவனேஸ்வரில் நடைபெற்ற BSNL Casual/Contract Federation-ன் அகில இந்திய செயற்குழுவில் ஒப்பந்த/தற்காலிக ஊழியர்களின் கோரிக்கைகளுக்காக போராட்டங்கள் நடத்த திட்டமிட்டுள்ளது. 2014 பிப்ரவரி 7 முதல் 9 வரை ராஜ்காட்டில் நடைபெற்ற BSNL ஊழியர் சங்கத்தின் மத்திய செயற்குழுவும் ஒப்பந்த ஊழியர்களின் கோரிக்கைகளுக்காக BSNL ஊழியர் சங்கமும் இணைந்து இயக்கங்களை நடத்துவது என முடிவு செய்துள்ளது. அதன் அடிப்படையில் முதல் கட்டமாக 26.02.2014 அன்று கீழ்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்ட போராட்டம் எழுச்சியோடு நடைபெற்றுள்ளது.ஆர்ப்பாட்டத்தை நடத்திய அனைத்து கிளைகளுக்கும் மாநில சங்கங்களின் பாராட்டுதல்கள். பாராளுமன்ற தேர்தலையொட்டி அடுத்த கட்ட போராட்டங்கள் தள்ளி வைக்கப்பட்டன . தற்போது ஒத்தி வைக்கப்பட்ட போராட்டங்களை மறுபடியும் நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அகில இந்திஅ அளவில் ஆகஸ்ட் 26 ஆம் தேதி (செவ்வாய் கிழமை) தர்ணா போராட்டம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் BSNLEU & TNTCWU சங்கங்கள் இணைந்து தர்ணா போராட்டத்தை சக்தியாக நடத்த வேண்டும் என தமிழ் மாநில சங்கங்கள் கேட்டுக் கொள்கிறது.**

**<u>கோரிக்கைகள்</u>**

**1. விடுபட்ட தற்காலிக மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப் படுத்த வேண்டும்.**

**2. தற்காலிக அந்தஸ்து பெற்ற தொழிலாளர்களுக்கு DOT-க்குப் பதிலாக BSNL-இல் உள்ள குறைந்த பட்ச ஊதியத்தை வழங்க வேண்டும்.**

**3.ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு மத்திய அரசு நிர்ணயித்த குறைந்த பட்ச ஊதியம் வழங்கப்படவேண்டும்.**

4. Semi Skilled, Skilled, Highly skilled போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு அதற்கேற்றார்ப் போல் சமபளம் நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்படவேண்டும்.

5. A, B, C நகர தர வரிசைக் கேற்ப நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

6. வங்கிக்கணக்கு / காசோலை மூலமாக உரிய காலத்தில் சம்பள பட்டுவாடா செய்யப்படவேண்டும்.

7. ஒப்பந்தக்காரர் மாறினாலும் தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியான பணி உறுதி செய்யப்படவேண்டும்.

8. சமூக நலத் திட்டங்களான பணிக்கொடை, போனஸ், EPF, ESI வழங்கப் பட வேண்டும்.

9. தற்காலிக/ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு நிறுவன குடியிருப்பு, வீட்டு வாடகைப் படி வழங்கப் பட வேண்டும்.

10.EPF கணக்கை ஒப்பந்ததாரருக்குப் பதிலாக முதன்மை பணி வழங்குபவர் துவக்க வேண்டும்

11. அடையாள அட்டையை நிறுவனம் வழங்க வேண்டும்.

12. BSNL வளர்ச்சிக்கும், விரிவாக்கத்துக்கும் தேவையான கருவிகளை வாங்கி BSNL சேவையை மேம்படுத்த. வேண்டும்

13. சம வேலைக்கு சம சம்பளம் வழங்க வேண்டும்,.

14. பழி வாங்கலை ரத்து செய்ய வேண்டும்.

15. வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களை திரும்ப வேலைக்கு எடுக்க வேண்டும்

16. BSNL Casual and Contract Workers Federation தொழிற்சங்கத்தை அங்கீகரிக்க வேண்டும்.

BSNL நிறுவனத்தில் நடைபெற்று வரும் உழைப்பு சுரண்டலை தடுத்து நிறுத்த உறுதியோடு போராடுவோம்...கோரிக்கைகளை வென்றெடுப்போம்...

வாழ்த்துக்களுடன்,

S.செல்லப்பா
மாநில செயலாளர்
BSNLEU

C.வினோத்குமார்
மாநில செயலாளர்
TNTCWU